FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8044368

1. District மாவட்டம் : Coimbatore   PS காவல்நிலையம் : VACC   Year ஆண்டு : 2022   FIR No முதல் தகவல் அறிக்கை எண் : 14/2022/ACCB   Date நாள் : 14.10.2022   10.00 hrs

2. (i) Act சட்டம் : Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018   Sections பிரிவுகள் : 7(a), 7(a) r/w 12
(ii) Act சட்டம் :   Sections பிரிவுகள் :
(iii) Act சட்டம் :   Sections பிரிவுகள் :
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from நாள் முதல் : 7.10.2022 18.00 hrs   Date to நாள் வரை : 13.10.2022 13.00 hrs
Time Period நேர அளவு :   Time from நேரம் முதல் :   Time to நேரம் வரை :
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.10.2022   Time நேரம் : 09.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 14.10.2022   Time நேரம் : 10.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Tamil typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் : Child Welfare Committee Office, Ukkadam and Collector office, old building - South direction - 9 kms and 6 kms
Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : S. Ranjitha   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : D/O Selvaraj
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 32   (d) Nationality நாட்டினம் : Indian   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் : Care taker   (g) Address : முகவரி : Kunnathur Colony, Pudur post, Sathy Main Road, Coimbatore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. Karthick, Legal probation officer, District Child Welfare Unit, Collector office, Coimbatore
2. Tmt. Dhanalakshmi, Staff, Child Welfare Committee office, CSM Nagar, Ukkadam, Coimbatore

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
NO delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .................................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறைப்பீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறைப்பீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

[signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறைப்பீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
14.10.2022

15. Date & Time of despatch to the court: 14.10.2022 – 11.30hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name பெயர் M. Vijayalakshmi
Rank நிலை Inspector No. எண் ..........

• GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

**சமர்ப்பிக்கப்படுகிறது:**

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.14/2022/AC/CB, u/s. 7(a), 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

14.10.2022-ம் தேதி 09.00 மணிக்கு காவல் ஆய்வாளர் M.விஜயலட்சுமி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயமுத்தூர், சத்தி மெயின் ரோடு, குன்னத்தூர் காலனி, புதூர் போஸ்ட் என்ற முகவரியில் குடியிருந்துவரும் திரு.செல்வராஜ் என்பவரின் மகள் திருமதி.S.ரஞ்சிதா என்பவர் கோவை ஊ.த.க. அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரை படித்து பார்த்தேன். புகார் சம்பந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குனரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 14.10.2022-ம் தேதி 10.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.14/2022/AC/CB, u/s. 7(a), 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் படி மேற்படி எதிரிகள் எல்.பி.ஓ கார்த்திக் மற்றும் குழந்தைகள் நல அலுவலகத்தில் வேலை செய்யும் தனலட்சுமி மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் S.ரஞ்சிதா (32) த/பெ செல்வராஜ் குன்னத்தூர் காலனி, புதூர் போஸ்ட், சத்தி மெயின் ரோடு, கோயமுத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயமுத்தூர்.

அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் உள்ள என் பாட்டி வீட்டில் குடியிருந்து வருகிறேன். என் முதல் கணவர் சுமார் 8 வருடத்திற்கு முன்பு என்னை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். எங்களுக்கு 16 வயதில் ஒரு மகளும் 12 வயதில் ஒரு மகனும் இருக்கிறார்கள். என் மகன் என் கணவருடனும் என் மகள் எனது சொந்த ஊரான ஊட்டியில் இருக்கும் என் பெற்றோர் வீட்டில் தங்கி 11-ம் வகுப்பு படித்து வருகிறாள். நான் கேர் டேக்கர் வேலை செய்து வருகிறேன். எனக்கு சிதம்பரம் ஊரைச் சேர்ந்த விக்னேஷ் என்பவரிடம் கடந்த 2018-ம் வருடத்தில் பழக்கம் ஏற்பட்டு கடந்த 2019-ம் வருடம் முதல் இருவரும் கோவை காளப்பட்டி வீரியம்பாளைத்தில் உள்ள வாடகை வீட்டில் ஒன்றாக வசித்து வந்தோம். நான் அடிக்கடி கேர் டேக்கர் வேலைக்கு சென்று அங்கேயே தங்கி வேலை செய்வேன் அவ்வப்போது வீட்டிற்கு வந்து செல்வேன். மார்ச் மாதம் 2022-ல் என் மகள் நாங்கள் குடியிருந்த வீட்டிற்கு வந்து எங்களுடன் இரண்டு நாட்கள் தங்கிவிட்டு சென்றாள். எனக்கும் விக்னேஷ்க்கும் கருத்துவேறுபாடு இருந்ததால் அவர் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்துகொண்டதை தெரிந்து கொண்டேன். நான் செப்டம்பர் மாதம் ஊட்டிக்குச் சென்றபோது, என் மகள் என்னிடம், நாங்கள் முன்பு குடியிருந்த கோவை காளப்பட்டி வீட்டிற்கு அவள் வந்திருந்தபோது விக்னேஷ் அவளிடம் பாலியல் தொந்தரவு செய்துவிட்டதாக சொன்னாள். இது சம்மந்தமாக நான் கோவை மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். போலீசார் வழக்கு பதிவு செய்துவிட்டு என் மகளை என்னுடன் அனுப்பிவைத்தார்கள். அதன்பின்பு போலீசார் எங்களுக்கு போன் செய்து உக்கடம் ஜி. எம் நகரில் இயங்கிவரும் குழந்தைகள் நல குழும கவுன்சிலிங்கிற்கு என் மகளை அழைத்துவரும்படி சொன்னதால் நான் என் மகள் மற்றும் பெண் போலீசாருடன் 06.10.2022-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு உக்கடம் சென்றோம். அங்கு சைல்டு வெல்பேர் கமிட்டி சேர்ந்த 5 நபர்கள் என்னை விசாரித்து என்னுடைய வீட்டு விலாசம் மற்றும் போன் நம்பரை வாங்கிக்கொண்டார்கள். பின்பு என் மகளிடம் விசாரித்தார்கள். நான் என் மகளை என் பாதுகாப்பில் வீட்டிற்கு அழைத்துசெல்வதாக சைல்டு வெல்பேர் கமிட்டியிடம் சொன்னேன். என் மகளும் அவர்களிடம் என்னுடன் வருவதாக கூறினாள். அப்போது கமிட்டியில் இருந்தவர்கள் உன்னுடன் அனுப்ப முடியாது என்று

சொன்னார்கள். நான் அதற்கு என் மகள் 11-ம் வகுப்பு படித்துவருகிறாள் படிப்பு பாழாகிவிடும் என்று கேட்டதற்கு அவர்கள் ஒரு நாளாவது உன் மகள் ஹோமில் தங்க வேண்டும் என்று சொன்னார்கள். பின்பு சைல்டு வெல்பேர் கமிட்டி அவர்கள் லட்டர் கொடுத்தின் பேரில், நானும் பெண் போலீஸ்சாரும் என் மகளை பாதுகாப்பு இல்லத்தில் சேர்த்துவிட்டோம். அன்றைய தினமே மாலை சுமார் 5.00 மணிக்கு 8248093488 என்ற எண்ணிலிருந்து எனது போன் நம்பர் 6381785595 -க்கு மிஸ்டுகால் வந்தது. நான் உடனே எனது போனிலிருந்து 8248093488-க்கு போன் செய்து கேட்டபோது சைல்டு வெல்பேர் கமிட்டி அலுவலகத்தில் வேலைசெய்யும் தனலட்சுமி பேசுறேன், உங்கள் மகளை கேட்டு நீங்க ரொம்ப கஷ்டப்படுறீங்க நாளைக்கு கலெக்டர் ஆபிசிலிருக்கும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலகத்திலிருந்து எல்.பி.ஓ கார்த்திக் சார் உக்கடம் ஆபிஸ்க்கு வருவாங்க, நீங்க இங்கு வந்து அவரைப் பார்த்து உன் மகளை வீட்டிற்க்கு அழைத்து செல்ல அவரிடம் கேளுங்கள் அவர் ரிப்போர்ட் கொடுத்தால் உங்கள் மகளை உங்களிடம் அனுப்பி வைப்பார்கள் என்று சொன்னார். அதன்படி நான் 07.10.2022-ம் தேதி காலை சுமார் 9.00 மணிக்கு தனலட்சுமி அவர்களுக்கு போன் செய்து நான் உக்கடம் வந்துவிட்டதாக சொன்னேன். அவர்களும் என்னை வெயிட் பன்னுங்கள் என்று சொன்னார். காலை சுமார் 11.00 மணியளவில் கமிட்டி மெம்பர்ஸ் அங்கு வந்தார்கள், நான் மீண்டும் அவர்களிடம் என் மகளை என்னுடன் அனுப்ப சொல்லி கேட்டேன். அவர்கள் உன்னுடன் அனுப்ப முடியாது, உன் அம்மா, அப்பாவை கூட்டிட்டு வா என்று சொன்னார்கள். அப்போது தனலட்சுமி அவர்கள் தனி ரூமில் இருந்தார்கள். அவர் என்னை வெயிட் பண்ண சொல்லிவிட்டு வெளியே சென்று விட்டார்கள். நானும் என் மகளை பார்க்க பாதுகாப்பு இல்லத்திற்கு சென்றுவிட்டேன். மதியம் சுமார் 02.15 மணிக்கு தனலட்சுமி என்னை கூப்பிட்டு வரசொன்னதால், நான் மாலை சுமார் 4.30 மணிக்கு உக்கடம் அலுவலகத்திற்கு சென்று தனலட்சுமி அவர்களை பார்த்தேன் அப்போது அவர் கார்த்திக் சார் வந்து விட்டார் வெயிட் பண்ணு என்று சொன்னார். என்னை மாலை சுமார் 06.00 மணிக்கு தனலட்சுமி அவர்கள் ஆபிஸ்குள் அழைத்து இவர்தாம்மா கலெக்டர் ஆபிசிலிருந்து வந்திருக்கிற எல். பி.ஓ கார்த்திக் சார் என்று சொன்னார். அவர் என் மகளின் கேஸ் சம்மந்தமான

விபரங்களை என்னிடம் விசாரித்தார் அப்போது நான் அவரிடம் கமிட்டியில் உள்ளவர்கள் என் மகளை பாதுகாப்பு இல்லத்திற்கு அனுப்பிவிட்டார்கள் என்றும் அதனால் என் மகளின் படிப்பு பாதிக்கப்படுகிறது என்றும் அவளை என்னுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் நான் ரிப்போர்ட் கொடுத்தால் உங்க மகளை உங்களிடம் ஒப்படைப்பார்கள், அதற்கு என்னை கவனிக்க வேண்டும், தனலட்சுமி உங்களிடம் பணம் சம்பந்தமாக சொல்லுவார்கள் என்று சொல்லிவிட்டு அவர் வெளியே சென்றுவிட்டார். அப்போது அங்கு இருந்த தனலட்சுமி அவர்கள் எல்.பி.ஓ ரிப்போர்ட் கொடுக்க வேண்டும் என்றால் சாருக்கு ரூ.10000/- பணம் கொடுக்க வேண்டும் என்று அங்கு இருந்த ஒரு பிரவுன் கலர் கவரில் எழுதிக் காட்டினார்கள். அதைப் பார்த்த நான் அவ்வளவு பணம் என்னால் கொடுக்க முடியாது என்று சொன்னதும் நீங்க பணம் கொடுத்தால்தான் ரிப்போர்ட் கொடுப்பார் என்று தனலட்சுமி சொன்னார். நான் கஷ்டமான சூழ்நிலையில் இருப்பதால் என்னால் அவ்வளவு பணம் ஏற்பாடு பண்ண முடியாது என்று சொன்னேன். தனலட்சுமி வெளியே சென்று கார்த்திக் சாரிடம் பேசிவிட்டு வந்து அவர் கடைசியாக ரூ.8000/-க்கு ஒத்துக்கொண்டார் என்று சொல்லி அதே பிரவுன் கலர் கவரில் எழுதி காண்பித்தார். பணத்தை கொடுத்தால் உடனே ரிப்போர்ட் கொடுக்க ஏற்பாடு செய்வார் என்று சொன்னார். என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாததால் கமிட்டி மெம்பர்ஸ் சொன்னபடி என் அம்மா அப்பாவை அழைத்துவந்து மகளை அழைத்துச்சொல்லலாம் என்று வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்பு 10.10.2022-ம் தேதி திங்கள்கிழமை தனலட்சுமி அவர்கள் காலை சுமார் 11.15 மணிக்கு போன் செய்து ஏன் பணம் கொண்டுவரவில்லை என்று கேட்டார். நான் அதற்கு என் அம்மாவையும், பாட்டியையும் அழைத்து உக்கடம் வந்துகொண்டிருக்கிறேன் என்று சொல்லி அங்கு மதியம் சுமார் 12.00 மணிக்கு சென்றேன். அங்கு சென்று கமிட்டி மெம்பர்ஸ் அவர்களிடம், அம்மாவையும் பாட்டியையும் காண்பித்தபோது மாலை சுமார் 05.30 மணிவரை காத்திருக்க வைத்துவிட்டு எந்த பதிலும் சொல்லவில்லை. பின்பு மாலை சுமார் 06.00 மணிக்கு தனலட்சுமி அவர்களிடம் கமிட்டி மெம்பர்ஸ் சொன்னதால், நான் அம்மாவையும் பாட்டியையும் அழைத்துவந்தேன் ஆனால் அவர்கள் எந்த பதிலும் சொல்லவில்லை

என்று சொன்னபோது, தனலட்சுமி அவர்கள், கார்த்திக் சாரிடம் பணம் கொடுத்திருந்தால் அவர் ரிப்போர்ட் கொடுக்க ஏற்பாடு பண்ணியிருப்பார் ஆனால் நீ தேவையில்லாமல் அம்மாவையும், பாட்டியையும் கூட்டிவந்திருக்க என்று சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் பணத்தை ரெடி பண்ணுகிறேன் என்று சொல்லிட்டு வந்துவிட்டேன். தனலட்சுமி அவர்கள் என்னை 11.10.2022-ம் தேதி பலமுறை போன் செய்து பணம் ரெடிபண்ணிட்டு வா என்று நச்சரித்தார். அதனால் நான் கார்த்திக் சாரை நேரில் பார்த்து பணம் ஏதாவது குறைக்க சொல்லலாம் என்று உக்கடம் வந்தபோது கார்த்திக் சார் இல்லை. பின்பு தனலட்சுமி அவர்களை பார்த்த போது பணம் கொண்டுவந்தியா என்று கேட்டார். நான் சாரை பார்த்து பணத்தை கொஞ்சம் குறைக்க சொல்லி கேட்கலாம் என்று வந்தேன் என்று சொன்னதற்கு சார் பழைய கலெக்டர் ஆபீசில் இருப்பார், போய் பாருங்கள் என்று சொன்னார். நான் 12.10.2022-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு கோயமுத்தூர் கலெக்டர் ஆபிஸிக்கு சென்று அங்கிருந்தர்வர்களிடம் கேட்டு மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலகத்திற்கு சென்று கார்த்திக் சார் அவர்களைப் பார்க்கபோனதும் கார்த்திக் சார் என்னை ஆபிஸ்க்கு வெளியே அழைத்துக்கொண்டு வந்துவிட்டார். நான் அவரிடம் சார் என்னால் 8000/- பணம் ஏற்பாடு செய்ய முடியாது கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டபோது, அதற்கு அவர் இது உன் குழந்தை சம்மந்தப்பட்ட விஷயம், தனலட்சுமியிடம் ஏற்கெனவே பணம் சம்பந்தமாக சொல்லியிருக்கிறேன். அவர்களை போய் பாருங்கள் என்று சொன்னார். நான் அவரிடம் சார் என்னால் அலைய முடியவில்லை என்று சொன்ன போது அவர் செல் நம்பர் 9677356450 ஐ கொடுத்துவிட்டு நீங்கள் இனிமேல் அலைய வேண்டாம் பணத்தை ரெடி செய்துவிட்டு போனில் பேசுங்கள் என்று சொன்னார். என்னால் அவர்கள் கேட்ட ரூ.8,000/- ஏற்பாடு பண்ண முடியாததால் 13.10.2022-ம் தேதி காலை சுமார் 08.30 மணிக்கு அவருடைய நம்பரில் பேசினேன். அவர் காலை 10.00 மணிக்கு மேல் என்னை பேச சொன்னார். பின்பு கார்த்திக் சார் என்னிடம் காலை சுமார் 11.15 மணிக்கு பேசினார். நான் அவரிடம் பணத்தை குறைக்கும் படி கேட்ட போது அவர் தனலட்சுமி அவர்களிடம் விவரம் சொல்லியிருப்பதாகவும் அவரை சென்று பார்க்க சொன்னார். எனவே நான் தனலட்சுமி அவர்களுக்கு போன் செய்த போது அவர்

உக்கடம் வர சொன்னார். நான் மதியம் சுமார் 01.00 மணிக்கு தனலட்சுமி அவர்களை உக்கடத்தில் உள்ள குழந்தைகள் நல குழும அலுவலகத்திற்கு சென்று பார்த்து கார்த்திக் சார் பணம் குறைப்பது சம்பந்தமாக உங்களை பார்க்க சொன்னார் என்று சொன்னேன். அதற்கு அவர் ஏன் சும்மா சும்மா வர்றீங்க, ஒரு டைம் சொன்னா பணத்தை கொடுக்கனும் என்று சொல்லிவிட்டு கார்த்திக் சார் ரூ.5000/-ம் ஆக பணத்தை குறைக்க சொல்லிவிட்டார் என்றும், பணத்தை ரெடி செய்துவிட்டு எங்களுக்கு போன் செய்துவிட்டு வருமாறு சொன்னார். என் மகளை பாதுகாப்பு இல்லத்தில் இருந்து, பெற்றோர் பாதுகாப்பில் ஒப்படைக்க ரிப்போர்ட் ரெடி செய்து கொடுக்க என்னிடம் ரூ.5000/- லஞ்சம் கேட்கும் எல்.பி.ஓ கார்த்திக் சார் மற்றும் குழந்தைகள் நல அலுவலகத்தில் வேலை செய்யும் தனலட்சுமி அவர்களுக்கு பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. இவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd.xx(ரஞ்சிதா) 14/10/2022. Madam, Received the complaint on 14.10.2022 at about 09.00 hrs. sd.XXXXX, Inspr, V&AC, Cbe 14.10.2022. Madam, After conducting discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.14/2022/AC/CB u/s 7(a), 7(a) r/w 12 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered by me on 14.10.2022 at 10.00hrs sd.XX Inspr, V&AC, Cbe 14.10.2022. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

(M.விஜயலட்சுமி)
14.10.22
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்புமற்றும் கண்காணிப்புபிரிவு,
கோயம்பத்தூர்.